**மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி**

**அசல் வழக்கு எண். 128 /2019 பி.வா.சா.1**

2026-ம் ஆண்டு ஜீன் திங்கள் 29-ம் நாள் திங்கள்கிழமை-ன் வாக்குமூலம் 1857ம் ஆண்டு சட்டப்பிரிவு17(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

பெயர்: ரவிசந்திரன் தந்தை பெயர்: சுப்பிரமணி

---

**29.06.2026.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1.பி.வா.சா.ஆ-2 ஆவணமானது சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலகத்திலிருந்து எனது தகப்பனாருக்கு கொடுத்த அசல் ஆவணம் இல்லை என்றால் சரிதான். மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் தாக்கல் செய்த மனு , ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் வாதியின் பெயரோ, வாதியின் தகப்பனார் பெயரோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் வாதி, வாதியின் தகப்பனார், வாதியின் சகோதரர்கள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

2. எனது தகப்பனார் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவில் யாரையும் விசாரணை செய்யாமல் பிறபிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றாலும், பட்டாவானது வாதியின் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. கிராம கணக்கில் மேற்படி மேல் முறையீட்டு உத்தரவு அடிப்படையில் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டு உத்தரவு நடைமுறைப்படுத்த எவ்வித நடைவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் எனது அப்பா எடுத்தார். ஆனால் நடைமுறைக்கு வரவில்லை. மேற்படி உத்தரவு வாதியின் அனுபவத்திலோ, வாதியின் சகோதரர்களின் அனுபவத்திரோ எவ்வித கட்டுபாடும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் தான் அனுபவித்து வருகிறேன். தாவாச் சொத்து ஆதியில் இருந்து இன்றுவரை வாதி வகையறா அனுபவத்திலிருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள உத்தரவு ஒரு தலைபட்சம் உத்தரவு, நடைமுறைக்கு வராத உத்தரவு என்றால் சரியல்ல. தாவாச் சொத்து நாளது தேதிவரை வாதியின் அனுபவத்திலிருந்து வருகிறது என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவில் நிலவுடைமை பதிவேடுகளை பரிசீலித்தாக கூறப்படவில்லை என்றால் சரியல்ல.